# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 121 29—09—1995

இதழ்: 719 விலை ரூபா 5-00


## மருத்துவ மனையில்
## ஆரோக்கிய அன்னை பெருவிழா

யாழ் அரசபோதனா வைத்திய சாலையில் நிறுவப்பட்டுள்ள ஆரோக்கிய அன்னை (வேளாங்கண்ணி மாதா) சிற்றாலய விழா எதிர்வரும் ஞாயிறுதினம் (ஒக்ரோபர் 1ஆம் நாள்) கொண்டாடப்படும். அன்று காலை 6-30 மணிக்கு யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ்விழாவையொட்டி செப்ரெம்பர் 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் மாலை 5-15 மணிக்கு திருப்பலியும் விசேட ஆசீர்களும் இச் சிற்றாலயத்தில் இடம் பெறும் என வைத்தியசாலை ஆன்ம குருவாகிய அருள் தந்தை S. ஸ்ரனிஸ்லொஸ் o.m.i. அறியத்தருவதுடன், இவ்விழாவில்கலந்து இப்போர்க் கால சூழ்நிலையில் நோய்வாய்ப்பட்டிருப்போருக்காகச் செபிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்.


LIBRARY 5-10-1995 UNIVERSITY OF JAFFNA


✻ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

நீதி சமாதான ஆணைக்குழுத் தலைவர் ஜனாதிபதிக்கு கடிதம்

# “அன்னையின் ஆட்சியில் அப்பாவிக்குழந்தைகள் அகோரப்பலி”

**நீங்கள் ஒரு அன்னையாக இருந்தும் ஒரு தாயின் பாசஉணர்வுகளை புரிந்துகொண்டும், 25க்கு மேற்பட்ட அப்பாவிக் குழந்தைகள் கொல்லப்பட்ட நிகழ்வை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்!**

கடந்த 22ஆம் திகதி, வெள்ளிக்கிழமை நடுப்பகல் 1 மணியளவில், நாகர் கோவிலில் இடம்பெற்ற மிலேச்சத்தனமான விமானக் குண்டு வீச்சு எறிகணைத் தாக்குதல்களினால் 20க்கு மேற்பட்ட நாகர் கோவில் மகாவித்தியாலய மாணவர்கள் கொடூரமாய் கொல்லப்பட்டதும், 40க்கு மேற்பட்ட மாணவர்கள் அங்கவீனப்பட்டு காயமடைந்ததையும், மற்றும் பல பொதுமக்கள் கொல்லப்பட்டதும் காயமடைந்ததையுமொட்டி, யாழ் மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் C. G. ஜெயகுமார் அடிகளார் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து அக்கடிதத்தில் அவர் கூறுவதாவது;

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## நாகர்கோவிலில் அரச படையின் அநாகரீகம்

## கிளி/மேய்ப்புப்பணி நிலையத்தில் பயிற்சி நெறி

கிளிநொச்சி மேய்ப்புப்பணி நிலைய மண்டபத்தில் இரண்டாவது தடவையாக நடாத்தப்பெற்ற மறைஆசிரியர் பயிற்சிநெறி, கடந்த ஜூலைத் திங்கள் 31ஆம் நாள் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்துடன் நிறைவேறியது. மூன்றுமாத காலமாக நடைபெற்ற இந்த வதிவிட பயிற்சி வகுப்புக்களில், கிளிநொச்சி மறைக்கோட்ட அனைத்துப் பங்குகளிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 21 இளைஞர், யுவதிகள் பங்கு பற்றினர்.

மேய்ப்புப்பணி நிலைய இயக்குனர் ம. இ. பயஸ் அடிகளாரின் அயராத முயற்சியினாலும், மறைக்கல்விப்

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## சர்வதேச மத்தியஸ்தம் தேவை

★ துணை ஆயர் மல்கம் றஞ்சித்

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு சர்வதேச மத்தியஸ்தர் ஒருவர் தலையிட வேண்டும் என மனித அபிவிருத்தி, சமாதானம், நீதிக்குமான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை அல்லது மூன்றாவது நாடொன்று மத்தியஸ்தராக கடமையாற்றலாம் என்று இந்த ஆணைக்குழுவின் தலைவரும் இலங்கை ஆயர் மன்ற செயலாளர் நாயகமுமான கொழும்பு துணை ஆயர் பேரருட்திரு மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார் என வத்திக்கான் வானொலி அறிவித்துள்ளது.

## “நசுக்கப்படும் பொழுது புத்தூக்கம் பெறுவோம்”

✻ யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

“மனித சமுதாயம் ஒன்று நசுக்கப்படும் பொழுது, அல்லது அழுத்தப்படும்போது அச் சமுதாயத்தில் இருந்து உயிர்த் துடிப்பும், மெய்ம்மைத்தன்மையும் வாய்ந்த சிறந்த கலை இலக்கிய ஊடகங்கள் மேற்கிளம்பும்.”

யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழுவால் ஒழுங்குசெய்யப்பட்டு செப்டெம்பர் 23, 24ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட பத்திரிகை, சஞ்சிகைகளுக்கான எழுத்துப்பட்டறையின் இறுதி நாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராய் கலந்து கொண்ட யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகுதோமஸ்சவுந்தரநாயகம் அவர்கள் தமது சிறப்புரையில் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர், எழுத்துக்கள் இதயத்தில் இருந்து எழவேண்டும். அப்போதுதான் அவை நடுநிலைத்தன்மை

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

புதிய கத்தோலிக்க பட்டதாரிகளுக்கான திருப்பலியில்

## ஏழைகளுக்காக வாழ்வை அர்ப்பணியுங்கள்

★ அருள்தந்தை P. யேசுநேசன் o. m. i.

16-09-94இல் நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டதாரிகளாகக் கௌரவிக்கப்பட்ட கத்தோலிக்க மாணவ மாணவியர் நன்றி கூறித் தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்த நிகழ்வு 17-09-95 அன்று நல்லாயன் நடுநிலைய ஆலயத்தில் இடம் பெற்றது.

அன்று காலை 7-30 மணிக்கு யாழ். கத். மாணவர் ஒன்றியத் தலைவர் திரு. ம. சாந்தகுணசிங்கம், வழிகாட்டி அருள் தந்தை மா. றெஜிஸ் ராஜநாயகம் புதிய பட்டதாரிகளை வரவேற்றனர். பட்டதாரிகளின் பெற்றோர், அன்பர்கள் பெருமளவு ஆலயத்தில் குழுமியிருந்த வேளையில். அருள் தந்தை P. யேசுநேசன் o.m-i. தலைமையில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அருள்தந்தை யேசுநேசன் ஆற்றிய மறையுரையில் “நம் மத்தியில் உருவாகிவரும் ‘புதிய ஏழைகளில்’ இறைவனைக் கண்டு. அவர்கள் வாழ்வு

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## மறையியல் கல்லூரி 7-10-95இல் ஆரம்பிக்கப்படுகிறது
## கற்கையாளர் 30-9-95இல் பதிவு செய்யவும்

மறையியல் கல்லூரி தொடக்கவிழாவும், மறையியல் டிப்ளோமா கற்கை நெறியின் ஆரம்பமும் 7-10-95 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நிகழவுள்ளது. யாழ் ஆயர் அவர்கள் இதிற் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இக்கற்கை நெறிக்கு தெரிவானோர் பட்டியல் அவ்வப்பங்குத்தந்தைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கற்கையாளர் 30-9-95 சனிக்கிழமை 9—12 மணிக்கிடையில் மறைக்கல்வி நிலையத்திலுள்ள பணிமனையில் தம்மைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

இக்கற்கைநெறிக்கு மிகுந்த ஆர்வத்துடன் விண்ணப்பித்த அனைவரையும், பங்குத் தந்தையரையும் பாராட்டி, இவர்கள் எல்லோரது விருப்பத்தையும் பூர்த்தி செய்ய முடியாததையிட்டு வருந்துவதுடன், இவர்கள் நலன் கருதி வேறு கற்கைநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என பதிவாளர் திரு. A. S. அகஸ்தின் தெரிவித்துள்ளார்.

## அனாதைச்சிறுவர் - முதியோர் மத்தியில்
## பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்கள்

சமூக மெய்ம்மைகளுக்கு ஒத்திசைவாகத் தம்மை உருவாக்கும் யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க ஒன்றிய மாணவர்கள், வாழ்வின் அடிப்படை அன்பை இழந்து ‘அரியாலை அன்பகத்தில்’’ பராமரிக்கப்படும் அநாதைச் சிறுவர்களுடன் 27-08-95 ஞாயிறு தினம் முழுவதையும் செலவிட்டனர்.

கடந்த 08-09-95 அன்று கொழும்புத்துறை புனிதவளன்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## யாழ் பொதுநிலை பிரான்சிஸ்கன் 3-ம் சபையின்
## 60ஆம் ஆண்டு நிறைவு

மேற்படிசபை யாழ். மறைமாவட்டத்தில் உருவாகி 60ஆம் ஆண்டு நிறைவு எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை புனித ஐந்துகாயவரம் பெற்ற பிரான்சிஸ் அசீசியாரின் பெருவிழாவில் இடம்பெறவிருக்கின்றது. அன்று மேன்மை தங்கிய யாழ்.ஆயர் தலைமையில் கூட்டு நன்றித்திருப்பலி யாழ். மரியன்னை பேராலயத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

இச்சபையின் ஆன்ம இயக்குனர் அருள்தந்தை J. P. செல்வராஜா இத்திருப்பலியில் பங்குபற்றுமாறு [illegible] மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்.

## தாய்மார் மகஜர்

போரை நிறுத்தி ஜனாதிபதியும் – விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் எனக்கோரி மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த பத்தாயிரம் தாய்மார்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றை மன்னார் ஆயர் இலங்கை [illegible] அனுப்பி வைத்துள்ளார்.

## மெய்யியல் நோக்கு வெளிவந்துள்ளது

மெய்யியல் சிந்தனைகளை சாதாரணமக்களோடு பகிர்ந்து கொள்ள ஒரு களமாக அமையும் ‘‘மெய்யியல் நோக்கு’’ எனும் சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது. சவேரியார் குருத்துவக் கல்லூரியினரால் வெளியிடப்படும். இச் சஞ்சிகை, ஆசிரியர் டோமினிக் அ. ஜோசப் Ph.D. அவர்களின் கருத்தின்படி, ஆய்வுகளில் ஈடுபடுவோருக்கும், ஆழமாக சிந்திப்போருக்கும் அவர்களின் முயற்சிகளுக்கு இம் மெய்யியல் ஓர் உந்து சக்தியாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

# வாழ்க்கை வழிகாட்டிகள்

எதிர்வரும் அகில உலக ஆசிரியர் நாளை (ஒக்ரோபர் 6) யொட்டி கல்விச் சமூகம் ஆசிரியர்களைப் பாராட்டி பல்வேறு மட்டங்களில் விழா எடுக்கின்றது. இவ்விழாக்கள் வெறும் புகழாரம் சூட்டும் கோலாகல வைபவங்களாயிராமல், ஆசிரியப்பணியின் மகத்துவத்தையும், ஆசிரியர்கள் நல்லாசிரியர்களாகச் செயற்படவேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தும் வாய்ப்புக்களாக மாறவேண்டும்.

ஒரு சமுதாய மேம்பாட்டிற்கு ஆசிரியர் வழங்கும் பங்களிப்பு அச்சாணியாயிருக்கிறது. எவ்வாறு மாணவர்களின் எதிர்காலம் ஆசிரியர்கள் வழங்கும் கல்வியில் தங்கியுள்ளதோ, அவ்வாறே மலரவிருக்கும் தமிழீழத் தேசத்தின் நல்வளர்ச்சியும் ஆசிரியர்களின் சிறந்த செயற்பாடுகளின் மூலம் ஊட்டம் பெறுகின்றது.

கல்வியூட்டல் என்பது ஒரு மனிதனை உருவாக்கும் அரிய முயற்சி. கல்வி மாணவர்களின் ஆளுமை முழுவதையும் வளர்க்க வேண்டும். ஆன்மீகம், கலாசாரம், உடல், பொருளாதாரம், அரசியல் ஆகிய எல்லாத்துறைகளிலும் அவர்களைப் பக்குவப்படுத்த வேண்டும். சமுதாய வாழ்வில் பங்கேற்பதன் மூலம், கல்வி நற்பண்புகளையும் நன்னெறி உயர் விழுமியங்களையும் பரப்ப உதவும் தன்மையைக் கொண்டது. வருங்கால வாழ்வுக்கு மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்.

கல்வி மாணவர்கள் மீது சுமத்தப்படும் சுமையாக இருக்கக் கூடாது. கல்விப் பணியில் ஈடுபடுபவர் தங்களுடைய சொந்தக் கருத்துக்களையும் கொள்கைகளையும் மாணவர்களின் மனத்தில் புகுத்திவைக்க ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தக் கூடாது. விளம்பரக்காரர்கள் தங்கள் கொள்கைகளைத் திணித்து நிரப்பும் கொள்கலன்களாக மாணவர்களைக் கருதக் கூடாது. இளைஞர்கள் தங்களுடைய சுதந்திரத்தை நல்லமுறையில் பயன்படுத்த மனதையும் அறிவையும் திறந்துவைக்கும் பாதையாக கல்வி அமையவேண்டும்.

கல்வி அறிவைச் சுரக்கும் ஒரு சுவையருவியாகத் திகழவேண்டும். மாணவரின் ஆளுமையின் ஆழத்திலிருந்து ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவற்றைப் பரிணமிக்கச் செய்வதே ஆசிரியரின் கடமையாகும். சில இளைஞரிடம் ஓவிய ஆற்றல், சிலரிடம் இசைப் பண்பு, சிலரிடம் இலக்கியத் திறன், சிலரிடம் கவிதா சக்தி, சிலரிடம் விஞ்ஞான சிந்தனை, சிலரிடம் மருத்துவ அறிவு, சிலரிடம் நடிப்பாற்றல், சிலரிடம் தொண்டு மனப்பாங்கு, சிலரிடம் அரசியல் ஆளுமை... இவ்வாறு பல சக்திகள் இயல்பாகவே அமைந்திருக்கும்.

''நுண்ணிய நூல்பல கற்பினும் — மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்''

என வள்ளுவர் பெருமான் கூறுகிறார். இந்த உண்மை அறிவைக்கண்டு அதை வளர்த்து வளமாக்குவதே கற்பிக்கும் ஆசிரியரது தலையாய கடன்.

ஆசிரியரின் தனித்தன்மை மாணவரிடம் படிவது தவிர்க்கமுடியாதது. மாணவரின் தன்மை ஆசிரியரால் பரிணமிப்பதும் மறுக்கமுடியாதது. ஆசிரியர் உயிரற்ற இயந்திரங்களுடன் பழகும் பொறியியலாளர் அல்லர் ஆசிரியர் வெறும் உடலுக்குச் சிகிச்சை செய்யும் மருத்துவரும் அல்லர். அவர் அறிவோடும் உணர்வோடும் மனத்தோடும் ஊடாடும் தொடர்பு கொள்பவர்.

இன்று சில கல்வி நிலையங்களில் நடக்கும் விபரீதங்கள் விசனத்துக்குரியவை. ஒரே நெருக்கடி! ஆசிரியர்க்கு மாணவரை இனங்காணத் தெரியவில்லை. ஒரே கும்பல்! ஆசிரியர் பாடப்புத்தகத்தை கையிலே வைத்துக்கொண்டு, கூட்டத்தோடு கூட்டமாக 'சிலபஸ்'ஸை முடிக்கும் ஆர்வத்தோடு கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு மாதச் சம்பளத்தை வாங்கிக்கொண்டு செல்கிறார். 'தனிப்பட்ட கவனம்' எந்தவொரு மாணவன்மீதும் இல்லை. மாணவருக்கு ஆசிரியரை அணுகி, ஐயம் நீக்கி அறிவு பெறவேண்டும் என்ற ஆர்வம் அற்றுப்போகிறது. மாணவர்களின் புலன்கள் திசை திரும்பி வாழ்வின் சோதனைகளில் திக்கித் திணறும்போது நல்ல வழிகாட்டிகள் இல்லாது தவிக்கிறார்கள்.

என்றுமில்லாதளவு, இன்று, இக்கட்டான இக்காலகட்டத்தில் நல்லாசிரியர்களின் தேவை அதிகம் உணரப்படுகின்றது. நல் மனம் படைத்தோர், பிறர் நலம் நாடுவோர், தியாக சிந்தையுடையோர் இவ்வுன்னத பணிக்குத்தம்மை அர்ப்பணிக்க முன்வரவேண்டும்.

# கிறிஸ்தவத்தின் நிழல்கள்

★ J. E. ஜெயசீலன் அடிகளார்

புனித தோமையாரின் வாழ்க்கைப் பின்னணியை சற்றுத்துல்லியமாக மனதில் கொள்ளும்போது புனிதர் சேரநாட்டில் பல புதுமைகளைச் செய்து நம்பூதிரிப் பிரிவு பிராமணர் உட்பட பல்லாயிரக்கணக்கானோரை கிறிஸ்தவர்களாக்கினார் என்பதனை கருத்தில்கொள்ளுதல் முக்கியமானது. அதுமட்டுமன்றி இவர்களின் வழிவந்தவர்கள் இன்றும் கேரளாவில் மூன்றில் ஒரு பகுதியினராக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்களை புனித தோமையாரின் வழி வந்த கிறிஸ்தவர்கள் என அழைத்து வருகின்றனர். சேரநாட்டிலிருந்து, பாண்டியநாட்டிலுள்ள மயிலாப்பூர் (சென்னை பட்டினம்) சென்று ஏறக்குறைய $4\frac{1}{2}$ மாதங்கள் கிறிஸ்துவின் நற்செய்தியினை போதித்தார். இதன் பின்னர் சீனநாட்டிற்குச் சென்று நற்செய்தியை எடுத்துரைத்தார். மீளவும் அங்கிருந்து மயிலாப்பூர் வந்து கடல்மார்க்கமாக கேரளாவிலுள்ள கிரங்கனூர் சென்றமையும் தெரிய வருகின்றது. தென் இந்திய மேற்குக் கடற்கரைக்கும் கிழக்கு கடற்கரைக்கும் இடையே பல தடவைகளில் கடல்மார்க்கமாக பிரயாணம் செய்த குறிப்புகளும் தெரிய வருகின்றன. இதன் அடிப்படையைக் கொண்டு ஆராயும்பொழுது புனித தோமையார் மாதோட்டம், யாழ்ப்பாணத்திலும் சில பட்டினங்களில் வந்து தங்கியிருக்கக்கூடும் என ஊகிக்க இடமுண்டு. எனவே தான் 'தொமாஸ் பார்வம்' முதல் செய்யுள் 12ஆம் வரியில் ''தோமையார் வேறுநாடுகள் சென்றார்.

இலங்கைக்கும் மலாக்காவுக்கும்'' என்று குறிப்பிடுகின்றது. அதுமட்டுமன்றி ''இலங்கையில் நற்செய்தி போதித்தார்'' என புனிதர் நிசேபோறஸ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை என்றால் மேற்கூறப்பட்ட தமிழ்நாட்டுக்கு மேற்குக்கரை, கிழக்கு கரை கடல்வழி மாதோட்டத்தை அல்லது யாழ்ப்பாணத்தை இடையே குறிக்கும் இடமாகக்கொண்டது. இது காரணம் பற்றித்தானோ என்னவோ இரு பாரம்பரியக்கதைகள் 'ஈழம்' பற்றி காணப்படுகின்றன.

இன்று 'எருக்கலம்பிட்டி' என வழங்கிவரும் கிராமம் 'சான்தோமை' பட்டணமாக அழைக்கப்பட்டு வந்துள்ளது. கிறிஸ்து பெருமானை பெத்தலகேமில் காணவந்த மூன்று அரசர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்து கஸ்பார் பெரிய பெருமாள் ஆயராக அபிசேகம் பெற்று பின்னர் தோமையாருடன் வேதசாட்சியாக மரித்தார் எனவும் மைலாப்பூரில் உள்ள சமாதியில் அடக்கம் செய்யப்பட்டார் எனவும்- பல்டேயஸ் ×× 575இல் குறிப்பிடுகின்றார்.

வரலாற்றுத்துறையில் பெரிதும் மதிக்கப்படுபவரான நீலகண்ட சாஸ்திரி தமது கருத்தை குறிப்பிடுகையில் (பக்கம் 309 Advanced History of India)

1ஆம் நூற்றாண்டு இந்திய கிறிஸ்தவம் பற்றி ஐயம் கொண்டாலும் அலெக்சாண்டிரியாவின் கொஸ்மஸ் தென் இந்தியாவைத் தரிசித்த பொழுது கி.பி. 522இல் இரண்டு நெஸ்தோரிய கிறிஸ்தவசபைகள் கேரளத்திலுள்ள நியூலனினும் இலங்கையிலும் இருந்ததாக குறிப்பிடுவதை ஏற்கலாம். கி.பி. 774இல் கண்டெடுக்கப்பட்ட செம்பு, தகட்டு சாசனம் இந்தியாவில் பல கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்ற உண்மையை குறிப்பிடுவதாலும் இவர்களுடன் பக்தர் ஜெருசலேம் நினிவே முதலிய இடங்களிலிருந்து பெயர்ந்து வந்தே குடியேறினர் என்கிறார்.

மார்க்கோபோலோ கி.பி. 1293 'புனித தோமையார் மலையையும் அங்கு அவர் வேதசாட்சியாய் மரணத்தையும் குறிப்பிடுகின்றார்.

(வளரும்: தோமையார் இலங்கைக்கும் ... வந்தார்?)

## நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவை

1. பொறுமையாக இரு. ஆனால்
   சோம்பேறியாக இராதே.
2. அன்பாய் இரு. ஆனால்
   அடிமையாக இராதே.
3. வீரமாய் இரு. ஆனால்
   போக்கிரியாக இராதே.
4. சுறு சுறுப்பாய் இரு. ஆனால்
   படபடப்பாய் இராதே.
5. சிக்கனமாக இரு. ஆனால்
   கருமியாய் இராதே.

(வளரும்)

ஆக்கம்: க. அருள்நேசன்

## ★ மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முகலிங்கன்

### 38. அர்த்தமிழந்த குறியீடுகள்

1. மனித நாகரிக வளர்ச்சியிலே மொழிவழியாகவும், பல்வேறு குறியீடுகளின் வழியாகவும் மனித இனம் கண்ட மேம்பாடுகள் பல.

இத்தகைய குறியீடுகளாக இயற்கையில் தான் கண்ட நயந்த பலவற்றையே மனிதன் பயன்படுத்திக்கொண்டான். இந்த குறியீடுகள் பலவற்றையும் தனது பண்பாட்டின் சின்னம், நாகரிகத்தின் வெளிப்பாடு என பெருமையும் கொண்டான்.

காலப் போக்கில் பெரும்பாலான சொற்களும்— குறியீடுகளும் அர்த்தமிழந்து போக வெறும் கருத்தளவிலான 'பெருமை' மட்டும் மிஞ்சுதல் இன்றைய யதார்த்தமாகும்.

வெறும் குறியீடுகள் — சொற்கள் மட்டுமன்றி மனிதன் உருவாக்கிய நிறுவனங்கள் பலவும் கூட இதன்வழி அர்த்தமிழந்துபோவது இன்றைய எமது அனுபவ தரிசனமுமாகும்.

2. யந்திரப் பாங்காக இந்த குறியீடுகளைப் பயன்படுத்துதல் ஒருபுறம்; தந்திரப்பாங்காக பயன்படுத்துதல் மறுபுறமாக இந்த அர்த்தமிழத்தல் அதிகரிக்கும்.

உதாரணம் தேடி அதிகம் சிந்திக்கவேணடியதில்லை.

சமாதானம் — சமாதான வெண்புறா என்ற குறியீடுகளின் அர்த்தங்கள் எங்கள் தேசத்தில் எப்படி உணரப்படுகிறது — உணர்த்தப்படுகின்றது இந்தவாரத்தில் நாகர்கோயிலில் வெள்ளைச் சீருடைகள் இரத்தத்தில் தோய விமானகுண்டு கொடுமையில் தொலைந்த அந்த பள்ளிச் சிறார்களின் அழிப்பு — சமாதான வெண்புறாவின் வாழ்வுக்காக என விளக்கப்படுமா? அர்த்தம் தொலைந்த குறியீடுகள்! மனிதர்கள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் அரங்கம் 8

## மசெனட் ஆண்டு

அமதிகள் அமுதம்

# புதிய உறவு

அ. கவிதா யாழினி,
யாழ், திருக்குடும்ப கன்னியர்மடம்.

காரிருளின் மத்தியில் கனத்த இதயத்துடன் அந்த அமைதியான இராப் பொழுதில் முகாரி ராகம் இசைப்பது போல அவள் முனங்கிக் கொண்டு இருந்தாள். அந்த இளஞ் சிட்டு தன்னையும் தன் நிலையையும் எண்ணி ஏங்கிக் கொண்டபோது சில்லென வீசிய இளங் குளிர் காற்று அவள் உடலைத் தழுவ அவளும் அவ் வசந்தத்தை அநுபவிக்க இயலாது அம் முகாமின் ஒரு மூலையில் சுருண்டு படுத்திருந்தாள். பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த தன் தங்கைமாரை பார்த்துக் கொண்டு இருந்தாள் அவள். திடீரென நடந்துபோன பழைய சம்பவங்களை அவள் மனம் இரை மீட்கத் தொடங்கியது.

கீதா பெயருக்கேற்றவாறு தகுந்த குணமும் அழகும் பெற்றவள். குடும்பத்தில் மூத்த பிள்ளை இவள் தான். இவளைத் தொடர்ந்து இன்னும் மூன்று பெண் பிள்ளைகள். எனவே குடும்பப்பாரம் கீதாவின் மேலே விழுந்தது. பெற்றோர் இருக்கு மட்டும் இவள் சந்தோஷமாக இருக்க முடிந்தது.

கீதா மங்கைப் பருவம் அடைந்து வரும் வேளையில் தேசத் துரோகிகளால் தகப்பனை இழந்தாள். இதுவரையும் ஒன்றுந் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருந்த கீதா தன் தங்கைமாரை கட்டிக் காக்க வேண்டியேற்பட்டது. தாய் நேசமும் மா இடித்துக் கஷ்டப்பட்டு உழைத்து தன் பிள்ளைகளை வளர்த்து பெரியவர்களாக்கினாள்,

பொருளாதார ரீதியில் குறைந்த இவள் குடும்பம், கஷ்டத்தில் வாடியது. குடும்பத்தைக் காக்க வேண்டிய தலைவனையும் இழந்ததால் கீதாவே ஒரு நிறுவனத்தில் தொழில் செய்து அதிலிருந்து கிடைக்கும் மிகச் சொற்பமான சம்பாத்தியத்தைக் கொண்டு தங்கைமாருக்கு வேண்டிய அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்தாள்.

கீதா திருமணப் பருவத்தை அடைந்த போதும் தன் ஆசைகளையும், எண்ணங்களையும் மண்போட்டு மூடினாள். தாய் நேசமும் கண்ணைமூட இவள் பித்துபிடித்தவள் போல அழுது பிதற்றினாள். இதனால் இவளே தன்னைத் தன் தங்கைமாருக்காக அர்ப்பணிக்க வேண்டியேற்பட்டது.

இப்படி பல நாட்கள் கடந்தன. ஒருநாள் இவர்கள் இருந்த கிராமம் இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டு இவர்கள் குடும்பமும் மற்றும் பல குடும்பங்களும் அகதியாக்கப்பட்டன. இப்போது இவளும் தங்கைமாரும் அந்த அகதிமுகாமில் தான் இருக்கின்றனர்.

இப்படி நடந்து போன பல சம்பவங்களை நினைத்துக் கொண்டிருந்த கீதாவுக்கு திடீரென்று கேட்ட சிரிப்பொலிச் சத்தம் திடுக்கிட வைத்தது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டு என்ன என்று அறியும் ஆவலுடன் தன் காதைக் கூர்மையாக்கினாள்.

முகாமின் முன்னுக்கு நேரே உள்ள வீட்டில் இருந்து ஒரு குரல் "என்ன நாம் எல்லோரும் உயிரோடு தப்பிவந்திட்டோம். எங்கட எல்லாச்சாமானும் சரியாக இருக்குது" என்று மகிழ்ச்சி ததும்ப கதைத்தது இவள் காதில் விழுந்தது.

இதைக்கேட்ட கீதாவின் மனம தன்னிடம் கொண்டு வர என்ன இருக்கு என்று ஏங்கியதே தவிர வேறு எதையும் நினைக்கவில்லை. தன்னோடு அவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தான் ஓர் அகதி என்று எண்ணியபோது அவள் கண்களில் இருந்து நீர் சிந்தியது.

இப்படி பல நாட்கள் கடந்தன. முகாமின் முற்றத்தில் யோசித்துக் கொண்டிருந்த கீதாவுக்கு திடீரென்று "ஓ வென்று" கதறி அழுஞ் சத்தங் கேட்டது. உடன் சத்தம் வந்த திசையை நோக்கிப் பார்த்தாள். இவ்வளவு நாளும் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்த முன் வீட்டில் உறவினரின் இழப்புச் செய்தி அவர்களைக் கலங்க வைத்தது. அவ் வீட்டில் துயரச் சம்பவம் நடந்து விட்டது என்று கீதா அறிந்தாள். அக் குடும்பம் துக்கத்தைத் தாங்க இயலாமல் அழுத அழுகையை கீதா தாங்க மாட்டாது எழுந்துபோய் அவர்களைத் தேற்றினாள். இறைவனை வேண்டும்படி நம்பிக்கை ஊட்டினாள். ஆறுதல் அடைந்தவர்கள் கீதாவுக்கு நன்றி கூறினார்கள். தன் கவலைகளுக்குள் மற்றவர்களுக்கு ஆறுதல் கொடுக்க இறைவன் தந்த சந்தர்ப்பத்தை எண்ணி இறைவனுக்கே நன்றி கூறினாள். கீதாவின் பெருந் தன்மையான செய்கை கண்டு தங்கள் தவற்றை உணர்ந்தவர்களாய் கீதா குடும்பத்தையும் தங்கள் குடும்பத்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## தாழ்மையாய் வாழ்ந்திடு

அன்னை மொழி அறிவு மொழி
அவனியிலே நல்லமொழி
அதனை நீ அதட்டாதே
உணர்ந்தே திருந்திடுவாய்
உண்மையிலே உயர்ந்திடுவாய்

உத்தமனாய் வாழ்ந்திடுவாய்
தந்தை அவர் சொன்னதையே
தயவாய் நீ கேட்டிடுவாய்
தாழ்மையாய் வாழ்ந்திடுவாய்
தரணியிலே உயர்ந்திடுவாய்
அறிஞர் சொன்ன கூற்று இது
அலட்சியம் நீ செய்யாதே.

★ அ. ரொனி றூவஸ்
சென். யோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்

## தெரிந்து கொள்ளுங்கள் 1;2
### விடைகள்

(1) 2ஆம் வத்திக்கான் பொதுச்சங்கம்
(2) திரு. ம. விக்டர் (யாழ் ஜெயம்)
(3) 59 மணிகள்
(4) அருள்கலாநிதி. A. J. V. சந்திரகாந்தன்.
(5) "ஆதியிலே கடவுள் விண்ணையும், (ஆரம்பம்) மண்ணையும் படைத்தார்."
"ஆண்டவராகிய இயேசுவின் அருள் அனைவரோடும் இருப்பதாக" (முடிவு)
(6) மேதகு ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை.
(7) அருள்திரு. தோமாஸ் அடிகள் யாழ்- பாண்டியன் தாழ்வு.
(8) மன்னார்.
(9) "ஆண்டவரே என் தேவனே"
(10) அருள்தந்தை மேரி பஸ்தியான் பற்றி கவிஞர் நாவண்ணன்.

பரிசு பெறுபவர்:

செ. தேவசிந்து
பெத்தேல், இல. 100
உடுவில்.

தெரிந்து எழுதும் ஏனையவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

பகுதி 3க்கு உடன் உங்கள் பதிலை 30.9.95க்கு முன் அனுப்புங்கள்.

பாதுகாவலன் காரியாலயத்தில் பரிசைப் பெறவும்.

அன்புடையீர்,

கடந்த இரு இதழ்களிலும் உங்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. எனினும் அமதிகள் அமுதத்தினை சுவைத்து இன்புற்றிருப்பீர்கள் என எண்ணுகிறோம்.

தொடரும் இராணுவ நடவடிக்கைகளினால் பல உயிரிழப்பு, பொருளிழப்பு, இடம் பெயர்வுகளை அனுபவிக்கும் மக்களை இந்த வேளையில் விசேசமாக நினைவுகூர்ந்து அவர்களின் துயரங்களில் பங்கேற்பதுடன், அவர்களுக்காகவும் எமது நாட்டிற்காகவும் இறைஞ்சிட புனிதராகவிருக்கும் முத்திப்பேறு பெற்ற ஆயர் இயூஜின் டி மசனெட்டின் பரிந்துரையை இறைஞ்சிட அழைக்கின்றேன்.

கடந்த ஒரு மாதமாக அமலமரித்தியாகிகள் சபையின் ஸ்தாபகர் ஆயர் முத்திப்பேறுபெற்ற ஆயர் இயூஜின் டி மசனெட்டின் வரவிருக்கும் புனிதர்பட்ட நிகழ்வை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்திலும், கிளிநொச்சி மறைக்கோட்டத்திலும் பல இடங்களில் நடாத்தப்பட்ட கண்காட்சி ஏனைய நிகழ்வுகள் பற்றிய செய்திகளை தொடரும் இதழ்களில் தருகின்றோம். இதோ இம்முறை மனம் திறந்த மடல் 5இல் இயூஜினின் குடும்ப நிலையினை அறிந்து கொள்வோமா?

அ. பி. லொசிங்ரன், அ.ம.தி.

## "மனம்திறந்த மடல்"

### மடல் 5

என் இனிய நண்பா!

இயூஜினின் பெருமைமிக்க வாழ்வுக்கு அவர் பெற்றோர்கள் காரணிகளாய் இருந்திருக்கமாட்டார்கள் என்ற எனது கருத்தை ஒருவேளை உன்னால் ஏற்றுக்கொள்ளமுடியாமல் இருக்கலாம். ஆனால் உண்மை அதுதானே! "திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்பர், "இறைவன் இணைத்து வைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக" என்கிறது விவிலியம். ஆனால் பணமும், பதவியும், பகட்டும் மட்டுமே சில மணமக்களின் தகைமைகளாகக் கணிக்கப்படும்போது நரக வாழ்வுக்குள் அல்லவா சீவியம் முழுவதும் திணறவைக்கிறது. இன்றைய யதார்த்தம் இதுவென்பதை நாம் உணர்வோம், ஆனால் 17ஆம் நூற்றாண்டிலும் இதுதான் நிலை. அதுவும் பிரான்சுநாட்டில் என்றால் நீ வியந்தே போவாய்.

இயூஜினின் தந்தை அன்ருவான்டி மசனெட்டிடம் பதவி இருந்தது, பகட்டிருந்தது... பரம்பரைப் பெருமை இருந்தது. அவற்றை ஈடு செய்யக்கூடிய அளவு பணம் இருக்கவில்லை.

அவரது தாயாரான மாறி றோஸ் ஜோ ஆனிசியிடம் அழகு இருந்தது—பணம் இருந்தது. ஒருவரிடம் இருந்தது மற்றவரிடம் இருக்கவில்லை... எனவே தேவை கருதி இணைத்து வைக்கப்பட்ட இல்ல(ா) அறம் என்பது தான் பொருந்தும்.

பதவியும், பகட்டும், சமூக கௌரவமும் வேண்டி அன்ருவானுடன் திருமண ஒப்பந்தம் செய்துகொண்ட மாறிறோஸ் ஜோ ஆனிசிக்கோ தன்னால் விலை கொடுத்து வாக்கப்பட்ட கணவனோடு நாளடைவில் இதயம் ஒன்றித்து வாழ்க்கை நடாத்த முடியவில்லை. தமது இல்வாழ்வில் முத்தான மூன்று பிள்ளைகளைப் பெற்றும்கூட அந்த பிள்ளைகளுக்காகவென்றாலும் தன் கணவனோடு இணைந்துவாழ அவளால் முடியவில்லை, அதிலும் அனைத்தையும் இழந்து பிரபு பிச்சாண்டியாக, அகதியாக நாடோடியாக மாறிய பின்னால் அவரோடு வாழ எப்படி முடியும்? விளைவு அவளாகவே விலத்திக்கொண்டாள். வெனிஸ் நகரத்தில் அவர்கள் வாழ்ந்தபோது தாயார் தன் மகளுடன் பிரான்சுக்குத் திரும்பிவிட்டாள்... அன்று ஏற்பட்ட பிரிவு நிரந்தரமாகிவிட்டது. விவாகரத்தினை வலிந்து பெற்றுக்கொண்டாள், இன்னும் பரிதாபம் என்னவெனில் தனது கணவனது... தனது மூன்று பிள்ளைகளது தந்தையது இறுதி நேரத்தில்... ஏன் மரணச்சடங்கில் கூட அவள் கலந்துகொள்ளவில்லை.

அவரது குடும்பப் பின்னணியை மிகச் சுருக்கமாகவே கூறியுள்ளேன். காரணம் என்னவெனில் அவரது அழைத்தலுக்கு தடையாக துறவு தமது தகுதிக்கு ஒவ்வாதது என்ற கருத்தையும் அவரது தாயார் அவர் உள்ளத்தில் விதைத்தார்.

நண்பா இந்தச் சம்பவங்களில் இருந்து உனக்கு என்ன புரிகிறது. நீ புரிந்துகொண்டதை எழுது. மறுகடிதத்தில் எனது கருத்தை வரைகின்றேன்.

நன்றி.

இங்ஙனம்
உன் இனிய நண்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு:
திரு. யோசப் பாலா

# சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்



## சவால்களை ஏற்போமா?

சமாதானத்தைத் தேடும் இதயங்கள் அமைதியிழந்து அல்லல்படுவது போலவே, சமாதானம் என்னும் வார்த்தையும் பலராலும் புதிய புதிய கருத்துக்களால் குழப்பி, குழம்பி இருக்கும் இன்றைய நாள்களில் சமாதானத்துக்காகவே பேச்சு வார்த்தை என்றும் சமாதானத்துக்கான படை எடுப்பு என்றும், சமாதான வழிபாடு, பாதயாத்திரை, செபங்கள் எல்லாம் உதட்டளவில் உச்சரிப்பவர்களுடன் நாமும் கலந்து விட்டோமா? அன்றி கிறிஸ்தவராகிய நாமும் உண்மை சமாதானம், இறைவன் எமக்கு கூறியதை தினமும் உச்சரிக்கும் தலை ஆட்டும் பொம்மைகளாகி விட்டோமா? அல்லது சமாதானத்தின் அர்த்தத்தை புரிந்து செயற்பட சமாதானத்தின் கருவியாக மாறி சவாலை ஏற்றுக்கொள்வோமா?

முதலில் நம்மை நாம் ஏற்றுக்கொண்டோமானால் தான் மற்றவரும் எம்மை ஏற்றுக் கொள்ள முடியும். எம்மைப் போலவே பிறரும் என ஏற்றுக் கொள்ளுவோமானால் அதுவே சமாதானத்தின் முதற்படி எனலாம். இதுவரை சமாதானத்துக்காக நாம் அளித்த பங்களிப்பு என்ன? மற்றவரிடம் எதிர்பார்ப்பதில் நாம் கொள்ளும் ஆவலை நாம் மற்றவருக்கு செய்கிறோமா? இதற்கான விடைகளே சமாதானத்துக்கான வழி என உணர்ந்து செயல்படுவதில்தான் வெற்றியும் உண்டு.

ஆயர் மன்ற இறுதி அறிக்கையில் ''சமாதானத்திற்காக செபித்து இறை ஆசிர் வேண்டுவதோடு நில்லாமல், தமது சுற்றாடலில் சமானத்தின் கருவிகளாக விளங்கும்படி இந்நாட்டு மக்கள் அனைவரையும் நாம் கேட்டுக்கொள்கிறோம்''

★ யோசப் பாலா

என ஆயர்கள் பேரவை அறைகூவல் விடுத்தார்கள். இதனை தனித்தும், குழுக்களாகவும் சகல இன புரிந்துணர்வுடன் பகிர்வதில்தான் உண்மைச் சமாதானம் பிறக்கமுடியும்.

தரிசனபூமி முதல் இதழில் குறிப்பிட்ட செய்திபோல் நவாலி தேவாலய அழிவில் அக்கறையுடன் அன்புக்கரம் நீட்டிய மாத்தளை நாகொட சிங்கள சகோதரர்களின் முன் மாதிரிகை நல்ல எடுத்துக் காட்டு அல்லவா? இப்படியும் சிலர் உள்ளனர் என்பதை உணர்வோமா? அதற்காக எத்தனை பேர் நன்றி பகர்ந்திருப்போம்.

இதைவிட இன்றைய நாட்களில் எம்மை புடமிட புனித பிரான்சீஸ் அசிசியன் செபத்தை அர்த்தத்துடன் உணர்ந்து

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## சமாதானத்தின் கருவிகளாக....

★ த. இ. றங்கநாயகம்

சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவோர் (மத். 5: 9). இது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் சமாதானப் பிரபு ஆண்டவராம் இயேசுக்கிறிஸ்து மலைப் பொழிவில் விடுத்த ஓர் அழைப்பு. இயேசுவின் இவ் அழைப்பு முற்றிலும் புரட்சிகரமானது, அர்த்தமுள்ளது, வாழ்வளிப்பது.

இன்று சமாதானத்திற்காக ஏங்கி நிற்கின்ற எமக்கு எமது சமூகத்திற்கு, நாட்டிற்கு இயேசுவின் இவ் அழைப்பு பொருத்தப்பாடாய் உள்ளது. இன்று எமது நாட்டிலே சமாதானம் என்பது சீர்குலைந்து சீரழிந்து போய்விட்டது. மனித உள்ளங்களிலும் இல்லங்களிலும் சமாதானம் என்பது உடைக்கப்பட்டு விட்டது. எனவே உடைக்கப்பட்ட சமாதானத்தை பொருத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் சமாதானத்தின் கருவிகளாக திகழ்வோம். கிறிஸ்தவ வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம்.

என்னால் இது எங்ஙனம் ஆகும் என நாம் ஒவ்வொருவரும் நினைக்கலாம். ஏனெ

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## சமாதானத்தை நோக்கி.......

அன்னதானம், பூமித்தானம் அரிய கல்வித்தானங்கள்
சொர்ணதானம் சொத்துத்தானம் சொல்லும் தானமென்கிறார்
என்னதானம் செய்தபோதும் இதயசாந்தி படைக்குமோ?
மன்னவாநீர் பிறந்தபோது மலர்ந்ததானம் இடைக்குமோ?

பூமிமீது நன்மனத்தோர் போற்றும்சமா தானமே
பொங்கி எங்கும் தங்கும் அன்பின் புனிதசமா தானமாம்
ஆயரில்லம் தேவதூதர் தூயவார்த்தை ஓதினார்
அந்தஞான கீதமென்றும் அழிவிலாத வேதமாம்

ஏழைதன்னை வாழவைக்கும் இனியநெஞ்சப் பணியிலே
எளியவர்க்கு அருள்சுரக்கும் இதயதாகக் கனிவிலே
வாழ்விழந்து அகதியான வறிஞர் வாடு நினைவிலே
மூளுகின்ற அன்புசாந்தி மோட்சபாதை நோக்குமே

எங்களின்ப தாமிழந்து எம்மயலோர் துன்பமே
ஏற்றுவாழும் இலட்சியத்தின் ஏணிமீது ஏறுவோம்
தங்கமான சாந்திநாளும் தங்கும்வான வீட்டிலே
தற்பரனார் பொற்கரங்கள் தாங்கியெம்மை ஏந்துமே.

— யாழ் ஜெயம்

## சமாதானத் தென்றல் உன்னில் வீச வேண்டுமானால்...

உண்மைதேடி பொய்மையில் மகிழும் நெஞ்சங்கள்
நன்மை நாடி தீமையில் திருப்தியடையும் – உள்ளங்கள்
அமைதி தேடி அவலங்களில் சரணாகும் ஆன்மாக்கள்
சமாதான கொடியின்கீழ் சமரசம் என்ற பெயரில்
போர் அனர்த்தங்கள்!

இவை தான் இன்றைய ஜதார்த்தங்கள்.

உடைந்துபோன உள்ளங்களைப் புதுப்பிக்கும் அன்பில்
நீ தென்றலாகு!
வருந்திச் சுமை சுமக்கும் மாந்தருக்கு பரிவுடன்
கொடுக்கும் தோள்களில் நீ தென்றலாகு!
வடிகின்ற விழி நீரைத் துடைக்கும் பசும்கரங்களில்
நீ தென்றலாகு!
வாழ்விழந்து வாடிடும் நெஞ்சங்களை உறுதியூட்டும்
வார்த்தைகளில் நீ தென்றலாகு!
சமூகத்தின் வசை மொழிமாலைகளால் சூடப்பட்டு
நொறுங்குண்ட உள்ளங்களாய் தவிக்கும் உறவுகளில்
நீ தென்றலாகு!

நீ சமாதானம் பெற வேண்டுமெனில்
உன்னில் சமாதான விருட்சம் துளிர்விட வேண்டுமெனில்
உன்னில் சமாதான நீரூற்று ஊற்றெடுக்க வேண்டுமெனில்
நீ தேடி அலையும் சமாதானம் உன்னில் உதயமாக
வேண்டுமெனில்
நீ சமாதானத்தின் தென்றலாக வீசு! அப்போது
மற்றவர்களின் சமாதானத் தென்றல் உன் வாழ்வையும்
வருடி வாழ்வில் வசந்தம் சேர்க்கும் தென்றலாகும்.

★ செல்வி மேரி றெஜினா அந்தோனிப்பிள்ளை
3ஆம் ஆண்டு கிறிஸ்வ நாகரீகம் சிறப்புக்கலை
யாழ். பல்கலைக் கழகம்

## குட்டிக் கதை: பாடம்

★ எஸ். ஏ. அழகராசா
(யாழூர் அழகன்)

''அம்மா''–''ஐயோ–''ம்''– விறகுச் சுமையோடு வந்து கொண்டிருந்தசைக்கிளின் பின் சில்லு ஒவ்வொரு முறை பள்ளத்தில் விழுந்து எழும்போதும் வேதனையால் துடித்தது.

''ஏய்!...விறகைச் சுமந்து வருவதற்காய் இப்படிச் சத்தம் போடுவதா?...கழுதை அமைதியாய் வா''—

எசமானுக்கு முன்னால் வழி காட்டிச் செல்பவன் என்ற கர்வத்தில் முன்சில்லு பின் சில்லைச் சண்டைக்கிழுத்தது.

''சகோதரா! என் வேதனை புரியாமல் — என்மீது இரக்கப் படாமல் ஏன் என்னை ஏசுகிறாய்?''

'' சீ! ... சகோதரனா! ... நீ வேலைக்காரன்! ...... நானோ எசமானின் முன்னிருந்து வழி காட்டும் துணைவன் ... நான் நினைத்தால்...''—முன் சில்லு சீறியது.

''சகோதரா! ... நாம் ஒருடலின் உடன் பிறப்புகள் ... நாம் இணைந்து சமாதானம்–சகோதரத்துவத்துடன் இயங்கினால்தான் நம் பயணத்தின் இலக்கு சரியாய் — விரைவாய் அமையும்'' — பின்சில்லு உண்மையைச் சொன்னது.

''சீ..நாயே...அளவுக்கு மீறுகிறது உன் பேச்சு ... விறகு சுமப்பவன் நீ ... என்னை [illegible] மறந்துவிடாதே''.

''நான் சொன்னது தவறென்றால் என்னை மன்னித்துவிடு சகோதரா''.

பகையோடும் பயணம் தொடர்ந்தது. திடீரென்று,

''புஸ்...ஸ்...ஸ்'' ... — முன்சில்லு காற்றுப் போய் செயலிழந்தது.

''சனியன் பொறுத்த இடத்தில் காலை வாரிவிட்டது''— எசமான் முன்சில்லைத் திட்டித் தீர்த்தான்.

சைக்கிள் கடைவரை உருட்டிச் செல்லும்போது முன்சில்லு நிலத்தோடு கசங்கிப் பிழிபடுவதைப் பின்சில்லு ''எனக்கு காற்றுப்போனாலும் இதே நிலைதானே'' என்று என்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## சமாதானத்திற்கு வழி பிறக்காதோ?

ஓ...மானிட சமுதாயமே!
உன்னைத்தான் கேட்கிறேன்!!
ஒரு கணம் சிந்திக்கமாட்டாயா?
உழுத்துப் போன மரபுகளையேன் பிடித்துக்
கொண்டிருக்கின்றாய்,
கருத்தில்லாத வற்றுக்கேன் காரணம் சொல்கின்றாய்
நன்றல்லாத வற்றையேன் நலமெனப்போற்றுகின்றாய்
உண்மையில்லாத வற்றுக்கேன் உளம் மகிழுகின்றாய்,
போலியான வற்றுக்கேன் வர்ணம் பூசுகின்றாய்,
வேலியாய் இருக்க வேண்டிய நீ, ஏன்
வெள்ளாடாய் மாறுகின்றாய்,
தடுக்கி விழுந்தவனை ஏன், எழும்ப விடாது
தடுக்கின்றாய்,

கொடுக்க வேண்டும் தண்டனை என்றேன்
கொல்வதற்குக் 'கல்' எடுக்கின்றாய்,
குற்றம் செய்வதற்கு அவன் மட்டும் காரணமா?
சுற்றம் நாற்றத்தில் மிதக்கையிலே,
சுத்தம் பேசுவதில் அர்த்தமில்லை.
மற்றவன் மேல் குற்றம் சுமத்தும் நீ,
நித்தம் நல்லவை நினைத்தாலென்ன?
சித்தம் செயலினில் பதித்தாலென்ன?
புத்தம் புதியவை புனைந்தாலென்ன?
யுத்தம் மறைந்திட உழைத்தாலென்ன?
அத்தனையும் நீ உணர்ந்தாலென்ன?
சமாதானத்திற்கு வழிதான் வந்து பிறக்காதோ?

— அபிர்ராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கண்மணிகள்

| 9 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| 19 | எம் வாழ்வின் வழி யேசு |

காவலன் கண்மணிகாள்!

இறையேசுவின் ஆசிகள் உங்களுள் நிறைவதாக.

இச்சுடர் தொடக்கம் ஆண்டு 8 வரை கற்போருக்காக இச்சிறு களத்தைக் காவலன் கண்மணிகள் அர்ப்பணிக்கிறார்கள்.

காவலன் கண்மணிகளாக இதுவரை இருந்தவர்கள்! இப்பொழுது இருப்பவர்கள்! இவர்களில் பற்றுப் பாசம் மிக்கவர்கள்! தங்கள் படைப்புக்களை! இவர்களுக்காகப் படைக்கவும்.

வாசிப்பில் ஆவலுடன் ஈடுபட, அதனூடாக நற்செய்தியை நன்கு அறியச் செய்யுங்கள்.

இறையேசுவின் பாதையில் மன நிறைவுடன் வாழ்ந்து பெற்றவர்க்கும், பெரியவர்க்கும் உற்ற துணையாக வாழ வழி காட்டுங்கள்.

அறிவு நூல்களை வாங்கி, படித்து பக்குவமாகப் பாதுகாத்து, மற்றவர்களும் படிக்க வீட்டில் ஒரு சிறு இடம் ஒதுக்குங்கள்.

## சிறுகச் சேருங்கள்

மூன்றெழுத்துக்களையுடைய சொல், பின்வரும் கூற்றுக்களுக்கு விடையாக வரும் பதிவேட்டில் பதிந்து உங்கள் விடைகளை சரிபார்க்கவும்.

1. சிலுவை அடையாளம் இடும்பொழுது நெஞ்சைத் தொடும் இரண்டாம் ஆள்,
2. பத்திமாவில் தேவதாயின் காட்சி பெற்ற சிறுமி.
3. யேசுவின் ஐந்து காயங்களையும் தன்னுடலில் பெற்ற புனிதரின் ஊர்.
4. செபமாலைத்தாசர் சபை தந்த அடிகளார்.
5. இப்பயிருக்கு கண்ணீர் என்னும் நீர் ஊற்றவேண்டும் என்பது அனுபவ மொழி.
6. நீதியின்பால் பசிதாகமுள்ளோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இது பெறுவர்.

விடைகள் அடுத்த சுடரில் வரும்.

அன்பின், அன்பு விழி,

## சமாதானத்தின்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

னில் சமாதானம் என்றதும் அரசியல் கண்ணோட்டமே எம் கண்முன் வருகின்றது. இது முற்றிலும் தவறானது. சமாதானம் என்னிலேஉள்ளது. அது என்னிலே வாழப்பட வேண்டும். சமாதானத்தின் சாதனங்களாகிய சத்தியம், நீதி, பிறரன்பு என்னில் வளர்க்கப்படவேண்டும். இவற்றைக் கடைப்பிடிப்பவர்கள் இன்னல்கள் நடுவிலும் மன அமைதி கொள்வர். சமாதானத்தை சுகிப்பர்.

என்னில் சமாதானத்தின் பண்புகளை வளர்த்த நான் என் சகோதரனோடு, குடும்பத்தோடு சமாதானமாய் வாழ வேண்டும். எனவே தான் இயேசு நீ பீடத்தின் மீது காணிக்கை செலுத்த வரும் போது உன் சகோதரனுக்கு உன்மீது மனத்தாங்கல் இருப்பதாக நினைவுற்றால், பீடத்தின் முன் காணிக்கையை வைத்து விட்டு முதலில் போய் சகோதரனோடு சமாதானம் செய்துகொள். பின்னர் வந்து உன் காணிக்கையைச்செலுத்து (மத். 5: 23-24) என்றார்.

நான் என்னோடு என் குடும்பத்தோடு சமாதானம் செய்துகொண்டால் போதாது. என் அயலவரோடு சமாதானமாய் வாழவேண்டும். அப்போது தான் உண்மையான கிறிஸ்தவ வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்க முடியும். மேலும் நீதிக்கு துவக்கமும் ஊற்றுமாகிய இறைவனை வழிபடாதவர்களுக்கு சமாதானம் இருக்காது. புனித அகுஸ்தீனார் ஒழுக்க முறையால் ஏற்படும் மன அமைதியே சமாதானம் என்கிறார். சமாதானம் என்பது இயேசுக்கிறிஸ்து எமக்களித்த அரிய பரிசு. எனவே நாம் சத்தியத்தைக் கடைப்பிடித்து நீதியின்படி வாழும் போது இயேசுக்கிறிஸ்து கொண்டுவந்த சமாதானம் நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் குடிகொள்ளும். சமுதாயமும் நாடும் நலம் பெறும், சண்டைகள் ஃச்சரவுகள் மறைந்துவிடும். இவ்வாறு சண்டைகள் தீர்ந்து சமாதானத்தில் வாழும்போது நாம் அனைவரும் இறைவனின் உண்மையான மக்களாவோம்.

## குட்டிக்கதை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணியவாறு இரக்கத்தோடு பார்த்தது.

"வால் ரியூப்" மாற்றி புதிய காற்று ஏற்றப்பட்டபின் முன் சில்லு சொன்னது —

"சகோதரா!...என்னை மன்னித்து விடு — சமாதானம் — சகோதரத்துவத்தை மறந்து வாழ்ந்த நான் நல்ல பாடம் கற்றுக்கொண்டேன்".

## சவால்களை...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உச்சரித்தால் சமாதானத்தின் அர்த்தம் புரியும். அதன் வழியில் எம் உள்ளத்தையும் செயல்களையும் செயற்படுத்த சவால்களை வெல்ல சமாதானத்தின் கருவியாக மாற்ற முனைந்தால் தான் அந்த சமாதானத்தை சுவைக்கமுடியும்.

சமாதானத்தை தேடி அலைவதை விட்டு சமாதானத்தை கொடுக்கும் கருவியாக மாறினாலே சமாதானத்தில் நிலைத்து வாழமுடியும். முயல்வோமா?

## 5ஆம் வருட நினைவு



ஊர்காவற்றுறை மாதா கோவிலைச் சேர்ந்த
அந்தோனிப்பிள்ளை
பேதுறுப்பிள்ளை (மூப்பர்)
மலர்வு: 18.04.1909
உதிர்வு: 3.08.1990
'உயிர்ப்பும் உயிரும் நானே'
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்.
S. பஸ்ரியாம்பிள்ளை
15a, அசரப்பா றோட்
நீர்கொழும்பு. A/38/95

## 2-ம் மாத நினைவலைகள்



மேரி ஸ்ரெலா அருள்நாதன்
(குணமணி)

மண்ணில் 1949-04-05 விண்ணில் 1995-08-15

முதலும் முடிவுமற்ற இறைவா!

உமது வான்வீட்டில் நித்தியமாய் இணையவிரும்பும் உமது அடியாளை நாம் நினைவு கூருகின்றோம். இவவின் ஆன்மாவிற்கு முடிவில்லாத ஒளியை அளித்தருளும்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 1995-10-13 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவவைத் துயருடன் நினைவு கூரும்
மத்தியாஸ் மரியாம்பிள்ளை,
(மாமன்)
மற்றும் உறவினர்கள்
83, சுப்பிரமணியம் வீதி
அரியாலை,
யாழ்ப்பாணம். A35/95

திருத்தந்தையின் ★ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும்-25

### "பிரிந்த எந்தக் கிறிஸ்தவனுக்கும் நான் எதிரியல்ல..."

"...போர் என்பது நமது சிக்கலுக்குத் தீர்வு காணும் விடையல்ல. மனிதனுக்கு உகந்ததுமல்ல. ஆதலால் போரினைக் கை விடுங்கள்..."என அன்புக் கட்டளையிட்டார்.

"...பிரிந்த எந்தக் கிறிஸ்தவனுக்கும் நான் எதிரியல்ல. மாறாக, கிறிஸ்துவில் அவர்கள் எனது நண்பர்கள். அவர்களுக்கு எனது செய்தி அன்பும் சமாதானமுமே. எவ்விதகசப்பு, பகைமை மனப்பான்மையையும், போர்களையும் கிறிஸ்தவம் எதிர்க்கிறது...." இவ்வாறு உண்மைக் கிறிஸ்துவின் போதனைகளைத் தெளிவு படுத்தினார்.

டப்லின் நகரில் கூடியிருந்த எல்லாக் கிறிஸ்தவ சபையினர்க்கும் திருத்தந்தை மீண்டும் ஒன்றிப்பின் அவசியத்தை வலியுறுத்தினார். நீதியும் ஒப்புரவும் ஏற்பட உழைக்கவேண்டும். கிறிஸ்தவ முறையில் வட அயர்லாந்துப் பிரச்சனையை அணுக வேண்டும். இல்லையென்றால் நாம் போதிப்பதற்கும் வாழ்வதற்கும் பெரிய முரண்பாடு இருக்கும் என்றார்.

கால்வே அருகில் இரண்டரை இலட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் திருத்தந்தையைச் சந்தித்தபோது "...எங்களுக்குத் திருத்தந்தை வேண்டும்..." என்று பாடிக் கொண்டிருந்தனர்.

ஆயர்கள் பேரவைக்கு வந்த போது "...ஆயர்கள் சிலர் என் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று எண்ணி என்னை வரவேண்டாம் என்று எழுதி இருந்தும், உங்கள் துயரங்களைப் பகிர்ந்து கொள்ளவே இங்கு வந்தேன்..." என்று துன்பங்களில் பங்கு கொள்ளும் மனதுடன் சொன்னார்.


அதன் பின் மேனூத் நகரில் இருக்கும் புனித பத்திரிசியார் குருத்துவக் கல்லூரியில் அயர்லாந்து குருக்களுக்கும் குருமாணவர்களுக்கும் உரையாற்றினார்.

"...இன்றைய உலகப் போக்குள்ள நாடுகளில் நீங்கள்தான் இறைவனின் அடையாளங்கள் ... நீங்கள் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள். இதை வீதியில் செல்லும் மக்கள் உணரும்படி உங்களையே தனித் தன்மையால் காட்ட அஞ்ச வேண்டாம்..."

டிறேகேடாவில் தன் இறுதியுரையை உணர்ச்சி பூர்வமாக அமைத்தார். "நாடு எங்கோ போய்க்கொண்டிருக்கிறது என்பதைக் கண்டு கவலைப்படுகிறேன். கண்ணீர் வடிக்கிறேன். ... வாள் எடுப்பவன் வாளால் மடிவான் — என்று ஆண்டவர் சொன்னார். அயர்லாந்து மண்ணில் நிற்கிறேன். அகில உலகிற்கே சொல்லுகிறேன். கொடுமையும கலவரமும், வன்முறையும் விட்டொழியுங்கள். ... வீழ்த்தப்படும தலைகள் நம வீரத்தைச் சொல்லாது. வன்முறை விதைக்கப்படுவதால் பிரச்சினைகள தீர்வதில்லை. மாறாக அது பரப்பப்படுகிறது. நேர்மிகு கருத்துக்களுக்காக ஒரு வன்மைப் போராட்டம் என எவர் சொன்னாலும் அது நியாயமில்லை... வன்மை இல்லாது போனால் நேர்மையும் நீதியும் தானே வளரும். உலக மக்களுக்கு பலமிக்க நாடுகள் அளிக்கும் அனைத்துக் கொடுமைகளும் இன்றே நிறுத்தப்பட வேண்டும்..." அவர் கண்ணீர் ஒடியது. அவரின் அடுத்த செயல் அனைவரையும் அழ வைத்தது.

(வளரும்)

## இறை யேசுவில் மரித்த 41ஆம் நாள் நினைவு



காலஞ்சென்ற
செபஸ்தி றெஜினா
(யோசேப்பின்)
மலர்வு ; 04-01-1918
உதிர்வு : 24-08-1995

மதுரமான இயேசுவே! அளவற்ற நீதியும் கருணையுமுள்ள தேவனே! மண்ணுலகில் நின்று விண்ணுலகிற்கு நீர் அழைத்துக்கொண்ட காலஞ்சென்ற செபஸ்தி றெஜினா (யோசேப்பின்) அவர்களின் ஆத்துமத்தை உமது பாதார விந்தங்களில் அரவணைத்து நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா மோட்ச பேரின்ப பாக்கியத்தையும் அளித்தருளும் சுவாமி ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 03 - 10 - 1995 செவ்வாய்க்கிழமை காலை 5-45 மணிக்கு நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குகொண்டு பிராத்திக்குமாறு வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அருட்திரு செ. நீக்கிலஸ் o.m.i.
அடிகளார்
மக்கள், மருமக்கள்,
பேரன்மார், பேத்திகள்,
பூட்டி, மற்றும் உறவினர்கள்
புனித மரியாள் சாலை,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். A/37/95

## உறவு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஒருவராய் ஏற்று உறவாடினர். இழப்பிலும் நல்ல செய்தியைத்தரும் இறைவனின் செய்கையை எண்ணி ஒற்றுமையுடன் இறைவனுக்கு நன்றி பகர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைஞர் ஆணைக்குழு**

**அறிமுகப்படுத்துகின்றோம்: 3**

## புனித யாகப்பர் சமய, சமூக மகளிர் மன்றம்

**ஆரம்பம்:** *18-07-1989*

**தலைவர்:** யூஜின் யூலியஸ்

**முகவரி:** புனித யாகப்பர் ஆலயம், குருநகர்.

**விருதுவாக்கு:** மகளிர் இணைந்து மானுடம் வளர்ப்போம்.

**நோக்கம்!** அங்கத்தவரிடையே உறவை வளர்ப்பதும், அவர்களுடைய திறமைகளுக்கு வெளிப்படு களம் அமைத்துக் கொடுப்பதும் சமய சமூகப் பணிகளில் ஈடுபடுவதும்.

**அங்கத்தவர் எண்ணிக்கை:** 70

**கூட்டங்கள்:** — மாதத்தின் முதல் ஞாயிறு மன்றப் பொதுக் கூட்டம்.
— இறுதி ஞாயிறு மன்ற நிர்வாகக் கூட்டம்.
— முழு நிலா தினத்தன்று கருத்துரைக் கூட்டங்கள்.

### உப பிரிவுகளும் பணிகளும்

* சமயப் பணிப் பிரிவு:
— இல்ல வழிபாடுகள் நடாத்தல்
— மறைக் கல்வி பயிற்றுவித்தல்
— ஆலய வேலைகளில் ஈடுபடுதல்

* சமூகப் பணிப் பிரிவு:
— சிரமதானம்
— வைத்தியசாலைத் தரிசிப்பு
— சுகாதார சேவை
— விதவைகளுக்கு உதவுதல்

* கல்விப் பிரிவு:
— வசதியற்ற மாணவர்களுக்கு இலவசக் கல்வி கற்பித்தல்.
— வறிய மாணவருக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்.
— அங்கத்தவருக்கு ஆங்கில வகுப்புகள்.

* தொழிற் பிரிவு:
— பணிகளுக்குத் தேவையான வருமானம் பெற விருந்துக் கொண்டாட்டங்களுக்கு தேவையான பொருட்களைத் தயாரித்து வாடகைக்கு விடல்.
— அங்கத்தவருக்கு தொழிற் பயிற்சி வகுப்புகள் ஒழுங்கு செய்தல்

* கலைப் பிரிவு:
— உறுப்பினரின் கலைத்திறனை ஊக்குவித்தலும், பங்கில் அவற்றைப் பயன்படுத்தி கலை நிகழ்வுகளை நடாத்தலும்,

* விளையாட்டுப் பிரிவு:
— உறுப்பினரின் ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் செலவிட வகை செய்வதும் திறன்களை வளர்ப்பதும்.

புனித யாகப்பர் மகளிர் மன்றத்தினரே!

ஆறாண்டு கால உங்கள் பணிக்கு வாழ்த்துக்கள். மானுடம் வளர இணைந்து உழையுங்கள். தங்களது உப பிரிவுகளும் பணிகளும் மிகவும் முன்னுதாரணமானவை. உறுப்பினர்களின் எண்ணிக்கையும் மகிழ்வைத் தருவதே.

ஓர் ஆலோசனை: உங்கள் வாழ்வும் பணியும் தகுந்த தளத்திலே கட்டப்பட உறுப்பினர்களிடையே இறை வார்த்தைப் பகிர்வை அறிமுகப்படுத்துங்கள்.

ஆணைக்குழு என்றும் உங்களுக்கு உறுதுணை.
வளரட்டும் உங்கள் சமய, சமூகப் பணி.

மறை மாவட்ட இளைஞர் ஆணைக்குழு.

## நீதி சமாதான ...

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

நாகர்கோவில் பாடசாலைக்கு அருகாமையில், எதுவும் அறியாத அப்பாவி குழந்தைகள், புக்காரா விமானக்குண்டுத் தாக்குதலின் போது உயிர் இழந்திருக்கின்றார்கள்! அன்றையதினம் மொத்தமாக 54 பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்! ஏன் இந்த அநியாகக் கொலைகள்! நாம் தமிழராக இந்த நாட்டில் பிறந்தது தானா நாம் செய்த குற்றம்?

குழந்தைகள் கொல்லப்பட்டது, இன அழிப்பு நடவடிக்கை மட்டுமல்ல, இந்த நாட்டில் தமிழர்கள் தொடர்ந்து இருப்பதற்கு, குழந்தைகளைக் கொல்லுவதன் மூலம், முடிவு கண்டு விடலாம் என்று எண்ணுவதாக நாம் கருதுகின்றோம். தாயின் ஆட்சியிலும் குழந்தைகட்கு பாதுகாப்பு இல்லையென்றால், யாரிடம் ஒரு குழந்தை பாதுகாப்பைத்தேட முடியும்? நீங்களும், குழந்தைக்கு தாய்தான்- அப்படியான ஒரு தருணத்தில் உங்கள் குழந்தைகட்கு ஒன்று நடைபெற்றால் எவ்விதம் துடியாகத் துடிப்பீர்களோ, அதே போலத்தான் இந்த அப்பாவிக்குழந்தைகளின் தாய்மார்களும் கதறுகின்றார்கள் என்பதனை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

ஒரு நாட்டின் உயர்ந்த பண்பாடு, அது எவ்வாறு சிறுபான்மையினரை மனிதாபிமானத்துடன் நடத்துகின்றதோ அதிலேதான் தங்கியுள்ளது.

C.G. ஜெயக்குமார்.
நீதி சமாதான ஆணைக்குழு

திருத்தந்தையின் 67வது வெளிநாட்டுப் பயணம்

# நாடுகளில் நடக்கும் பயங்கர சம்பவங்களுக்கு முடிவு ஏற்படவேண்டும்

"அன்பான அகதிகளே! உங்கள் துன்பத்தில் பங்காளி நான். உங்கள் நாடுகளில் நடைபெறும் பயங்கரச் சம்பவங்களுக்கு முடிவு ஏற்பட வேண்டும்." இவ்வாறு திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் தனது ஆபிரிக்க நாடுகளின் விஜயத்தின் போது, கென்யாவில் திருப்பலி ஒப்புக்கொடுத்து உரையாற்றுகையில் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது: "றுவாண்டாவிலும் புறூண்டியிலும் இடம்பெறும் சம்பவங்கள் மிகப் பயங்கர மானவை. இவைக்கு முடிவு ஏற்படவேண்டும். இன நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் மன்னிப்பு வழங்கும் மனப்பான்மையும் ஒற்றுமை உணர்வும் அவசியமாகும்."

திருத்தந்தை தமது 67வது வெளிநாட்டுப் பயணத்தை இம்மாதம் 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் மேற்கொண்டார். ஆபிரிக்க கண்டத்தில் கத்தோலிக்க திருச்சபையின் எதிர்காலம் குறித்து வத்திக்கானில் சென்ற ஆண்டு நடைபெற்ற ஆபிரிக்க ஆயர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவுகளை வெளியிடும் பொருட்டு இப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. ஆபிரிக்க கண்டத்தின் கமரூன், தென்னாபிரிக்கா, கென்யா ஆகிய நாடுகளை இவ்விஜயத்தின் போது முறையே தரிசித்தார்.

தென்னாபிரிக்காவில் இம்மாதம்17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தலைநகர் ஜொகனஸ்பேர்க்கின் கிழக்கே உள்ள ஜெர்மிஸ்டன் குதிரைப்பந்தய திடலில் திருத்தந்தை திருப்பலி நிறைவேற்றினார். ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்களுடன் தென்னாபிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதி நெல்சன் மன்டேலா உட்பட பல தலைவர்களும் கலந்து கொண்டார்கள்.

இந்த மூன்று ஆபிரிக்க நாடுகளின் விஜயத்தின் போது, கென்யாவில் முஸ்லீம்கள் திருத்தந்தையின் பயணத்தை பகிஸ்கரித்தனர்.

## கிளிநொச்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் ஆர். சி. எக்ஸ். நேசராஜா அடிகளாரின் ஊக்குவிப்பாலும், மறைக்கோட்ட குருக்கள், கன்னியர்களின் சேவை மனப்பான்மையினாலும், இப்பயிற்சி நெறி சிறப்புற்று விளங்கியது.

மந்தைகளைத்தேடி அலையும் ஆயனாக, யாழ். ஆயர், மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இவர்களின் பயிற்சி நெறியை மேற்பார்வை செய்து, விரிவுரைகள் ஆற்றியதோடு, பயிற்சிமாணவர்களை மடுத் திருப்பதிக்கு திருயாத்திரையாக வழிநடாத்தி சென்று ஆசி வழங்கியது குறிப்பிடத்தக்கது.

தகவல்: எஸ். ஏ. நாதர்.

## அநாதைச் சிறுவர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதியோர் இல்லத்தைத் தரிசித்த இவ் ஒன்றிய உறுப்பினர்கள், வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து இம் முதியோருக்கு செய்யப்படும் பணிவிடைகளிலும், மற்றும் சேவைகளிலும் தங்களை ஈடுபடுத்தினர். -இரு பாலாரும் இல்லத்தின் அனைத்துப் பகுதிகளையும் சுத்தம் செய்தல்; ஆண்கள் இல்லத்தின் முற் பகுதியிலுள்ள மரங்களை வெட்டல், விறகு கொத்துதல், வாழை மரம் நாட்டல் போன்ற பணிகளும், பெண்கள் படுக்கை மெத்தைகள் தைத்தல், முதியோருக்கான பணிவிடை செய்தல் போன்றனவும் இவற்றில் சில. அன்றைய இச் செயற்பாட்டால் முதியோர் உள்ளங்களும் அவர்களைப் பராமரிக்கும் நெஞ்சங்களும் புளகாங்கிதம் அடைந்தன.

## புதிய கத்தோலி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளம்பெற உங்களை அர்ப்பணமாக்குவதே உங்கள் உருவாக்கத்திற்கு நீங்கள் காட்டும் நன்றி வாழ்வுமாகும்'' என பட்டதாரிகளுக்கு நினைவூட்டினார்.

தொடர்ந்து நடைபெற்ற பாராட்டு நிகழ்வில், வழிகாட்டி அருள்தந்தை ராஜநாயகம் தனது உரையில் "இன்றைய போர்க்கால சூழலால் பலநிலையிலும் உடைந்த உள்ளங்களாய் வாழும் மக்களுக்கு நம்பிக்கையின் உதயங்களாய் திகழ்வதே உங்கள் இலக்காய் இருக்கட்டும்'' என்று வாழ்த்தினார். செயலர் செல்வி வி. டில்ஷாந்தி இந் நிகழ்வை நிறைவாக்கிய அனைவருக்கும் நன்றி கூறினார்.

## பங்குத் தளங்களில் கையெழுத்து ஏடு

பங்கு மக்களின் கருத்துக்களையும் ஆக்கங்களையும் உள்ளடக்கிய கை எழுத்து சஞ்சிகை / பத்திரிகை தயாரிக்கும் பணியில் உற்சாகமுடன் இயங்குவதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறோம்.

உங்கள் பங்கில் தயாராகும் கை எழுத்து ஏடுகள் ஒரே பார்வையில் மதிப்பீட்டைச் செய்யவும், ஏனைய எழுத்துலக அலுவலர்கள் கருத்துப் பரிமாற்றத்தைப் பெறவும் 24-10-95 க்கு முன் தயாரித்து வையுங்கள்.

பங்குத் தந்தையின் உற்சாகத்தால் எழுத்துப் பயிற்சியில் கலந்து பயனடைந்த பயிற்சியாளர்களே! உங்கள் பங்கில் தயாரிக்கும் கை எழுத்து ஏடுகளையும், உங்கள் தனிப்பட்ட ஆக்கங்களையும் 24-10-95க்கு முன் எம்மிடம்சமர்ப்பியுங்கள்.

எழுத்துப் பயிற்சியில் கலந்து பயின்ற பயிற்சியாளர்களே! உங்கள் அடுத்த ஒன்றுகூடலுக்கான திகதியை அடுத்த பாதுகாவலனில் எதிர்பாருங்கள்.

தொடர்பிற்கு:
செ. யோசப் பாலா
செயலாளர்,
தொடர்புசாதன ஆணைக்குழு
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

## நசுக்கப்படும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ந்ததாகவும் விமர்சன நோக்கு இணைந்த நிதர்சன வெளிப்பாடாய் அமையும். என்று கூறினார்.

மேற்படி நிகழ்வானது இரு நாள் பயிற்சிபட்டறையாக களசெயல் அமர்வு நிகழ்வாக யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது. நாற்பத்தைந்துக்கும் மேற்பட்ட எழுத்துறையில் ஆர்வமுள்ளோர், இதில் கலந்து கொண்டனர். கையெழுத்து பத்திரிகை நடத்துவோர், பத்திரிகை, சஞ்சிகையில் எழுதுபவர்கள், பல்கலைக்கழக மாணவர் என பலதரப்பட்டவர் மிகுந்த ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் இதில் பங்கு கொண்டனர்.

இணைப்பாளர்களாக, நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்களாக பாதுகாவலன் ஆசிரியர் குழுவினரும், ஆணைக்குழுவின் செயலருமான திரு. செ. யோசப்பாலா அவர்களும் செயற்பட்டனர். பட்டறையின் தலைமை நெறியாளராக யாழ். பல்கலைக்கழக சமூகவியல் விரிவுரையாளர் திரு. என். சண்சமூகலிங்கன் அவர்கள் செயற்பட்டார்.

தொடர்புச்சாதனங்களின் சமூகத்தாக்கங்கள், தொடர்பியலின் உளவியல், பத்திரிகை, சஞ்சிகைகளின் சமூகப் பொறுப்பு, பத்திரிகை சஞ்சிகைகளுக்கானமொழி, கத்தோலிக்க வெளியீடுகளின் நோக்கும் போக்கும் சஞ்சிகை தயாரிப்பு, வடிவமைப்பு போன்ற பத்திரிகை தயாரிப்புக்களுக்கு தேவையான விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட்டு அவை தரம் வாய்ந்த விரிவுரையாளர்கள், பேராசிரியர், இலக்கிய விற்பனர்கள் போன்றோர்களால் கருத்துரைகளாகவும், கருத்து பரிமாறல்களாகவும் வழங்கப்பட்டது. நிகழ்வு பி. ப. 5.00 மணியளவில் நிறைவுற்றது.

தகவல்: G. கெனத்
(பட்டறையில் சிதறிய சிந்தனைகள் அடுத்த இதழில்)

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் [illegible] அச்சகத்தில் 1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org